உ

சிவமயம்



யாழ்ப்பாணம் — அளவெட்டியைப்

பிறப்பிடமாகக் கொண்டவரும்

உயர்சைவ வேளாண் குலத்திலகரும்

மீசாலை வடக்கு வாசகரும்

பரந்தன் விவசாயியுமான

உயர்திரு. சரவணமுத்து

# சுப்பிரமணியம்

(சமாதான நீதவான்)

அவர்களின்

பிரிவு குறித்த


# நினைவு மலர்

15-5-1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள்



தோற்றம்: 15-08-1901 மறைவு: 15-04-1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்துப் பார்க்கிறேன்

கரைச்சிப் பகுதியில் வாழும் மக்களின் முன்னேற்றத்துக்கா அயராது உழைத்துவந்த தியாகச் சுடர் இன்று எம்மிடையே இல்லாது அணைந்துவிட்டது. அவர் அமரராகிவிட்டார் றங்கூன் ஐயா என்று அன்பாக அழைப்பார்கள். ஐயா அவர்களின் மறைவு நிறைவு செய்ய முடியாததொன்று. கிளிநொச்சிப் பெரியார் வரிசையில் மற்றும் ஓர் பேரிழப்பு. ஐயா, என்று சொல்ல இனி வேறு யாரும் இல்லாமல் வாழ்ந்து மறைந்துவிட்டார் வல்லவர், நல்லவர், வள்ளலவர். ஏழைகளின் தந்தையாக எளிய விவசாயிகளின் முதல்வனாக, அவர்களின் ஒருவனாக, அவர்களின் கலங்கரை விளக்காக வாழ்ந்து காட்டியவர் சிறந்தவொரு கூட்டுறவு ஊழியனாக இருந்து இன்று போய்விட்டார்.

உயர்ந்த உருவம், வெள்ளிக்கம்பி போன்ற மீசை, 8 முளவேட்டி, கைநிறைந்த நெசனல், கழுத்தைச் சுற்றிய 6 முள பரமாஸ் சால்வை, வாயில் சுருட்டு. கையில் குடை இவைதான் எமது மனக்கண்முன் தெரியும் தோற்றம். இவற்றுடன் ஐயா அவர்கள் 3 மைலுக்கப்பால் உள்ள தமது பண்ணையில் இருந்து பூநகரி வீதியால் நடந்து வரும் காட்சி மிகவும் அலாதியானது. அவரது நிமிர்ந்தநடை எந்தக்கூனர்களையும் நிமிரச்செய்துவிடும். எந்தக்காரியத்தையும் நேரத்திற்குச் செய்யவேண்டும் முந்திச்செய்யவேண்டும் என்ற மனநிலையும் துடிப்பும் உள்ள இவர் இந்த விஷயத்திலும் எங்களை முந்திச் சென்று விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஒரு முதுமானிப் பட்டதாரி. எந்தப் பல்கலைக் கழகம் இவருக்கு இந்தப்பட்டத்தை அளித்ததென்று நீங்கள் வியப்பீர்கள். ஆம் இவர் சமூகம் என்னும் பல்கலைக் கழகத்திலும் கூட்டுறவு என்ற வளாகத்திலும் நன்றாகத் தேர்ச்சியடைந்து அதில் முதுமானிப்பட்டம் பெற்றவர் என்றால் அது மிகையாகாது. மக்கள் மத்தியில் மக்கள் சேவையே மகேசன் சேவையென்று பணிபுரியும் போது ஏதும் சிக்கல் தோன்றும்போது தீர்மானம் எடுக்குமுன் மிகவும் நுட்பமாக அப்பிரச்சினையை அலசி ஆராய்வார். ஒரு சுருட்டுப் புகையுடன் தலையை ஆட்டுவார். இறுதியாக புன்முறுவலுடன் தனது இறுதி முடிவைத் தெரிவிப்பார். இப் முடிவு இருபகுதியினருக்கும் திருப்தியளிப்பதாக இருக்கும் இவரால் வாழ்க்கையில் உயர்ந்தோர் எத்தனை எத்தனை.

கால் நூற்றாண்டுக்கு மேலாக கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக அதன் நிர்வாகப் பணிப்பாளராகக் கடமையாற்றிய மணியம் ஐயா அவர்கள் இப்பகுதி விவசாயப் பெருமக்களின் துயர் துடைக்கத் தனது சக்தி முழுவதையும் பாவித்து அவர்களது அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமானவர். [illegible] தலைமையைப் பெற்றதால் சங்கம் வளர்ந்தது. மதிக்கப்பட்டது, பெருமைபெற்றது. இவரால் அமைக்கப்பட்ட சங்கத்தின் இரண்டு மாடிக்கட்டிடம் அதை அடுத்து பிரமாண்டமான நெற்களஞ்சியம் என்பன இந்நகர் தனில் இவரின் பெருமையை எடுத்துக்கூறும் நினைவுச் சின்னங்களாகும். ஐயா அவர்கள் சங்க நிர்வாகம் மூலம் வட்டக்கச்சி பன்னங்கண்டிப் பாலத்தை பல இலட்சம் ரூபா செலவில் அமைத்த மாபெரும் சாதனையை நாம் என்றும் மறப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 25 ஆண்டுகளாக அவரோடு பழகிய வாய்ப்பைப் பெற்றவன் யான். கரைச்சிப்பகுதி நல்ல கல்விக் கூடங்கள் இல்லாத ஒருகாலம் சைவத்துக்கும் தமிழுக்கும் புத்துயிர் அளிக்கவேண்டி ஒரு நேரம் ஐயா அவர்கள் கரைச்சிச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை 30 ஆண்டுகளுக்கு முன் அமைத்து அதன் செயலாளராக இருந்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இதன் நிர்வாகத்தின்கீழ் கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம், பன்னங்கண்டி தமிழ் வித்தியாலயம். புத்துவெட்டுவான் சைவ வித்தியாலயம் என்பன அமைந்தன இக்கல்விக் கூடங்களில் ஒன்றான பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் 10 ஆண்டுகளுக்குமேல் சேவை செய்துள்ளேன் தம்மை நாடுவோரை பண்பாக அணுகி அவர்தம் குறைகளை அன்போடு கேட்டு அளப்பரிய தொண்டுபுரியும் அன்னாரின் இழப்பு இத்தொகுதிவாழ் பல்லாயிரக் கணக்கான மக்கட்கெல்லாம் பேரிழப்பாகும்.

இவர் குமரபுரம் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தின் ஆரம்பச் செயலாளராக இருந்து அதன் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்தவர். கோயிலின் மூலஸ்தானம் வெளிக்கொணாறு திருப்பணிகளை முன்னின்று நடத்தியவர். பரந்தன் 5-ம் வாய்க்கால் வரசித்தி விநாயகர் ஆலய வளர்ச்சியிலும் தமது வாழ்நாளில் கூடிய சிரத்தைகாட்டியவர். கடமையுணர்வுடனும், கட்டுப்பாடாகவும், கண்ணியமாகவும் வாழ்ந்த பெரியார். இறைவன் சந்நிதானம் சென்றுவிட்டார்.

இவர் சிறந்த கூட்டுறவுத் தலைவனாக, சமாதான நீதிபதியாக, மரணவிசாரணை அதிகாரியாக கல்விக் கூடங்களின் செயலாளராக, ஆலய நிர்வாகியாக விவசாயிகளின் தோழனாக வாழ்ந்த பெரியார். ஊருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்த உத்தமர் பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட வில்லை. பணம் படைத்தவர். ஆனால் குணம் மாறவில்லை எல்லாருக்கும் சுமைதாங்கியாக வாழ்ந்தார் ஆனால் எவருக்கும் சுமையாக இருக்கவில்லை. பிறர்க்காக வாழ்ந்து தன்னைத் தேய்த்து இறுதியில் மண்ணுலக வாழ்வை நீத்த அமரர் சரவணமுத்து சுப்பிரமணியம் ஐயா அவர்களின் புகழ் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை யெனும்
பெருமை யுடைத்திவ் வுலகு'' (குறள்)

குமரபுரம்,
பரந்தன்,
23-4-1984.

மு. சுப்பையா
(இளைப்பாறிய அதிபர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## அமரர் திரு. ச. சுப்பிரமணியம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

அமரர் திரு. ச. சுப்பிரமணியம் அவர்கள் 1901-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அளவெட்டி என்னும் ஊரில் பிறந்தார். இவர் தனது கல்வியை கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆரம்பித்தார். அக்காலம் ஆங்கிலேயர் ஆட்சி நடைபெற்றமையினுல் தனது கல்வியை ஆங்கிலத்தில் கற்று 1918ம் ஆண்டு நடைபெற்ற ஈ. எஸ். எல். சி. பரீட்சையில் சித்தியடைந்தார். இப் பரீட்சையில் இவர் திறமையாக சித்தியடைந்தமைக்காக இவருக்கு ரூபா ஐம்பது வெகுமதியாகக் கிடைத்தது.

இவர் தனது வாழ்க்கை பயணத்தை 1918ம் ஆண்டு ஆரம்பித்தார். முதற்கட்டமாக இவ்வாண்டே பர்மாவில் புகையிரதப் பகுதியில் தொழில் பெற்றுச் சென்ருர். 1924ம் ஆண்டு இவர் தனது வாழ்க்கைத் துணைவியாக சாவகச்சேரியைச் சேர்ந்த அன்னபூரணம் அம்மையாரை திருமணம் செய்துகொண்டார். இவர் தனது இல்லற வாழ்க்கையை பர்மாவில் சீரும் சிறப்புமாக நடத்தி வந்த காலத்தில் 2வது உலக மகாயுத்தம் ஆரம்பமாகியது. இதன் காரணமாக 1945ம் ஆண்டு தனது துணைவியாருடன் நாடு திரும்பினர்.

தாய்நாடு திரும்பிய இவர் விவசாயத்தில் ஈடுபட்டார். குஞ்சுப்பரந்தன் என்னும் இடத்தை தனது வசிப்பிடமாக்கிக் கொண்டார். இக்காலத்தில் தனது வாழ்க்கையில் மட்டும் அக்கறை கொள்ளாது, பொதுத் துறைகளிலும் அளப்பரிய சேவைகளைச் செய்தார். பரந்தனில் கூட்டுறவுத் துறையில் இவர் செய்த சேவைகள் அளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியான. இக்காலத்தில் இப்பகுதி மக்கள் இவரை "ரங்கூன் மணியம் ஐயா" என அன்பாக அழைத்தார்கள். மணியம் ஐயாவின் முயற்சியினல் 1948ம் ஆண்டு கரைச்சி நீர்ப்பாசனத் திட்ட ஐக்கிய விளைபொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு ஜே / 969 இலக்கத்தில் பதிவாகியது. அன்று தொட்டு அன்னர் அவர்கள் 1958ம் ஆண்டுவரை மேற்படி சங்கத்தில் தலைவராக சேவைபுரிந்து வந்தார். அன்னரின் அயராத முயற்சியின் காரணமாக 1958ம் ஆண்டு அதே பதிவில் பரந்தன் ப. நோ. ஐ. சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது இச்சங்கத்தில் மணியம் ஐயா அவர்கள் 1969ம் ஆண்டுவரை செயலாளராக சேவை புரிந்தார்.

மேற்குறிப்பிட்ட சேவைகளை விட அவர் செய்த சேவைகளில் சிலவற்றை இங்கே குறிப்பிடுதல் அவசியமானதொன்ருகும்.

1. குறிப்பிடத்தக்க நெல்லை சங்கம் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதன் மூலம் புசல் ஒன்றுக்கு சதம் 10% பெற்று வந்த பெருந்தொகைப் பணத்தில் பரந்தன் சைவ வித்தியாசாலை ஆரம்பமாகியது.
2. வட்டக்கச்சி பன்னக் கட்டிப் பாலம் பெரும் தொகையான பணத்தில் இவரது பெருமுயற்சியினலே கட்டப்பட்டது,
3. தற்போதைய கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள மேல்மாடிக் கட்டிடம் உட்பட நெற்களஞ்சிய கட்டிடம் நுகர்ச்சி, கனரகம், புடவை விற்பனவு நிலைய கட்டிடங்கள் யாவும் இவரது சேவைக்கு சான்று பகருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 1961ல் இச் சங்கக் கட்டிடத்தில் தச்சுத் தொழில், மேசன் தொழில் பயிற்சி நிலையம் அரசாங்கத்தால் நடத்தப்பெற்று தொழில்துறையில் இப்பகுதி இளைஞர் பலர் பயிற்சிபெற வாய்ப்புக் கிடைத்தமை.

5. இப்பகுதி படித்த யுவதிகளில் பெரும்பாலானோர் கணிசமான வருவாயை பெறத்தக்கதாக ஒரு பெரிய கைத்தறி நெசவு நிலையம் தொடர்ச்சியாக இயங்கி வந்தது.

6. 1969ம் ஆண்டு இவர் சங்கத் தலைவராக கடமையாற்றிய போதே அரசாங்கம் அகில இலங்கையிலும் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்க விரும்பிய கிராமிய கிராமிய வங்கித் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பெற்ற மூன்று ப. நோ. கூ. சங்கங்களுள் பரந்தன் ப. நோ. கூ. சங்கமும் என்பது பெருமையுடன் குறிப்பிடத்தக்கதொன்று. 1969-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு சங்கங்கள் மறுசீரமைக்கப்படும் வரை சங்கத்தின் தலைவராகச் சேவை ஆற்றினார்.

7. 1971ம் ஆண்டு சங்கங்கள் புனரமைக்கப்பட்ட பின்னர் கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் இயக்குனராகவும் தலைவராகவும் சேவையாற்றினார்.

(தகவல்: செயலாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன்)

மறைவு: கால் நூற்றாண்டு காலத்திற்கு மேல் பொது வாழ்வில் ஈடுபட்டு சமூகத்துக்குப் பெருந் தொண்டாற்றி பயனுள்ள வாழ்வு கண்ட மணியம் ஐயா 15-04-1984 சித்திரா பூரணைத் தினத்தில் தனது பூரணமான வாழ்வை நீத்தார்.

குமரபுரம்,
பரந்தன்,
10-05-84.

வ. நாகரத்தினம்
முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரங்கூன் மணியம்

## தோற்றம்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஓராம் ஆண்டு
ஆனதோர் ஆவணித் திங்கள் தன்னில்
பாருளோர் ஏற்றுகின்ற பதினைந்தாம் நாள்
சரவணன் முருகனாகத் தரணியில் ஜனனமானான்.

## வாழ்வும் வளமும்

ஆரம்பக் கல்விதனை அளவெட்டியின் மண்ணில் துய்த்தே
ஓங்கிடு கலைக்கு ஞானம் உயர்விலக் கல்வி சார
தாங்கிடும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சென்று கற்று
மேம்படு புகழில் நின்றான் மேன்மைகொள் சுப்பிர மணியன்

திரைகடல் ஓடித் தேடும் திரவியம் சேர்கநாடி
மேலைத் தேயமாம் பேமாநாட்டில் மேவினன் பதவிஒன்று
தண்ட வாளத்தில் ஓடும்வண்டி நிலையத்தின் அதிபராக
தன்நலம் கருதாச் சேவையாற்றியே வாழ்ந்து வந்தான்.

இரண்டாவது உலகப் போரின் இருண்டதோர் காலந்தன்னில்
பிரித்தானிய நாட்டுத்தூதர் பீரிவினை யப்பான் கூரர்
தரும்வினை அனைத்தும் ஏற்றார் தூங்கிடவில்லை உள்ளம்
உயர்ந்ததோர் கொள்கையாளன் எனப்பெயர் கொண்டு
வாழ்ந்தான்

நாற்பத்தி ஐந்தாம் ஆண்டுநம் இலங்கை நாடிவந்தான்
நூற்றவர் நோற்பிலுள்ளோர் நுடங்கிய இனத்தைக் காக்க
கூட்டுறவு வியக்கமூலம் நாட்டினை இணைத்து வைத்தான்
ஒன்றுபடுதலே உயர்வுஎன்ற தத்துவம் நமக்குத் தந்தான்.

## மறைவு

செம்மல் காட்டியபாதை கூறும்கூட்டிய வழியில் செல்ல
நாட்டிய கரைச்சிமக்கள் கொட்டிடக் கண்ணீர் சிந்த
எண்பதாம் ஆண்டின் இடைப்படு பதினைந்தாம் நாள்
உலகபந்த மதறுத்துக்கொண்டு பரமனின் நிழலைச் சார்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியார் நினைந்துருகல்

மாநகர் சோலையான மீசாலை யூரில் என்னை
மணவினை முடிக்கவந்த உறுதுணையான கோவே
பொறுமையின் நிலவே எந்தன் புதுமையின் மலரே
அருமறை மருந்தே இன்று அலைவிடை விட்டுச்சென்ருய்

நாடெலாம் கடந்த போதும் நாயகி துணைவனுனுய்
வீடெலாம் வெளிச்சமானுய் விம்மியோர் கண்ணீர்தீர்தாய்
பசியெனக்கூறும் மாந்தர் பரிநிலை கண்டு நொந்தாய்
ஊரொடு சேர்ந்துவாழ்ந்தாய் உன்னை நான் எங்குகாண்.

மலையெலாம் இடிந்துதலைமேல் குவியினும் அஞ்சாய்
இலை(ப்)பொருள் என்றுகூறி எவரையும் இடிந்துநோக்காய்
பொதுப்பணிக் கென்றேவாழ்ந்தாய் புகழினை
ஏற்ருய் இல்லை
இதுதகும் என்றேஎன்னை இத்தரை நெகிழவைத்தாய்

போயினும் அழியவில்லை நீ ஆற்றிய கருமம் நாட்டில்
பொய்யுடல் அழிந்ததன்றி புகழ்உடம் பழிபவில்லை
உய்வினை காணும்மாந்தர் உள்ளத்தே தெய்வமானுய்
ஊழ்வினை முடிந்ததாலோ உயர்ந்திடும் தேவனுனுய்

## கரைச்சிவாழ் மக்களும், உற்ருர், உறவினர்களும் கரைந்துரைதல்

முருக்கமரம் பருத்தும் தூணுக் குதவாத
அரக்கமனம் படைத்தோர் ஆல்போல் தழைத்திருக்க
இரக்க மனமொன்ருல் இப்பதெல்லா இழந்துவிட்ட
மறக்க முடியாத மணியண்ணன் நீரல்லவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கூன் மணியம்என்றால் இருகண்ணும் தேடிவரும்
சிரங்கு களைவதைப்போல் சிரமம் களைந்திடுவாய்
குரங்கு மனத்தோர்க்கும் கோடி நன்மை செய்திடுவாய்
இரங்கு மணியண்ணா நீயில்லைப் பூமியிலே

கூட்டுறவு இயக்கத் தலை மகனாய்
நாட்டுறவு காத்த நல்ல மணியே
பரந்த(ன்) பூமியிலே பலகாலம் வாழ்ந்திருந்து
நிறைந்த கொடைமகனே நீயில்லாப் பூமியிலே

நரைத்தலையும் நற்றடி யொன்று கைத்துணைக்கும்
பிடித்து நடைபயின்றாய் பிதாப்போல எங்களுக்கு
நினைந்து வருந்துகின்றோம் மறுபடியும் பிறவாயோ
அறத்தை வளர்த்தெடுக்க ஆலயமாய் வாராயோ

எங்கள் இதய அஞ்சலிகள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய திரு. சரவணமுத்து சுப்பிரமணியம் அவர்களின் மரணச் செய்தி கேட்டதும் எமதில்லம் நாடி வந்து ஆறுதலளித்து ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், அந்தியேஷ்டி, சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் எமது குடும்பத்தினர் உள்ளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணக்கம்

அன்பிற்குரிய
குடும்பத்தினர்

திருக்கணிதம் - சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org